புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/04 - March 2023

# ஷம்பாலா நாவலில் வெளிப்படும் அரசியல்

**ஆய்வாளர்**
***ஜெ.சா. ஷர்ஜா***
*பதிவுஎண்: 20213114022032*
*முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர் தமிழ்த்துறை*
*நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி, மார்த்தாண்டம்.*
*மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி*

**நெறியாளர்**
***முனைவர்.செ.செல்வகுமார்***
*இணைப்பேராசியர், தமிழ்த்துறை,*
*நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி, மார்த்தாண்டம்*
*மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,*
*திருநெல்வேலி.*

**ஆய்வுச்சுருக்கம்**

*1970-ஆம் ஆண்டுகளில் தமிழ் இலக்கியத்தில் பல்வேறு கோட்பாடுகளை அறிமுகப்படுத்தும் திறனாய்வாளராக எழுதத்தொடங்கி படைப்பாளராக மலர்ந்தவர் டாக்டர். கார்லோஸ் என்ற இயற்பெயர் கொண்ட தமிழவன். இவர் ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்கள், சரித்திரத்தில் படிந்த நிழல்கள், ஜி.கே எழுதிய மர்ம நாவல், வார்சாவில் ஓர் கடவுள், முசல்பனி, ஆடி பாவை போல், ஷம்பாலா என்ற ஏழு நாவல்களை எழுதி இருக்கிறார்.*

இந்த நாவல்களில் பல்வேறு வகைப்பட்ட கோட்பாடுகளை முன் வைத்திருக்கிறார். உதாரணமாக சரித்திரத்தில் படிந்த நிழல்கள் என்ற நாவலில் வரலாற்றை அழித்து எழுதும், "பாலிம்செஸ்ட் ஹிஸ்டரி" என்ற உத்தியை தமிழ் எழுத்துப்போக்கில் அறிமுகம் செய்கிறார். இவரது நாவல்கள் பன்முகவாசிப்பு மிக்கவை. வாசிப்பில் அரசியல் அவரது எழுத்தையும் தாண்டி, பன்முக பரிமாணம் கொண்டவை. மட்டுமல்ல சகபிரதியில் (Inter text) அடிப்படையில் எழுதப்பட்டவை.

ஷம்பாலா நாவலை இந்து மத அரசியல் குறித்த விவாதமாகவும் வாசிக்கலாம். தமிழவனின் ஷம்பாலா நாவலை வாசித்து அதில் அரசியலைக் கண்டு மெய்மையை எட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

தமிழில் அரசியல் நாவல்களுக்கு நீண்ட வரலாறு உண்டு. சுதந்திரப் போராட்டக் காலத்தில் தேசபத்தி நாவல்கள் தொடங்கி திராவிட, இடதுசாரி, பெண்ணிய, தலித்திய, அரசியல் நாவல்கள் தத்தமது சமூக, அரசியல், பண்பாட்டுப் பார்வைகளோடு இன்றும் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. தற்போது நாவலின் அட்டையிலேயே "ஓர் அரசியல் நாவல்" என்ற உபதலைப்புடன் வந்திருக்கும் தமிழனின் ஷம்பாலா நாவல் மிகவும் வெளிப்படையாக இன்றைய வலதுசாரி, மதசார்பு அரசியலையும், ஆட்சியாளர் மற்றும் குடிமக்களின் மாறிவரும் உளவியலையும் குறிப்பிடுகிறது. தமிழவனின் ஷம்பாலா நாவலில் வாசிப்பும் அரசியலும் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

**தமிழவனின் நாவல்களில் வாசிப்பும், அரசியலும்.** 1970- ஆம் ஆண்டுகளில் தமிழ் இலக்கியத்தில் பல்வேறு கோட்பாடுகளை அறிமுகப்படுத்தும் திறனாய்வாளராக,

எழுதத்தொடங்கி படைப்பாளராக மலர்ந்தவர் தமிழவன். இவரின் இயற்பெயர் டாக்டர் கார்லோஸ்.

இவர் ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்கள், சரித்திரத்தில் படித்த நிழல்கள், ஜி.கே.எழுதிய மர்ம நாவல், வார்சாவில் ஓர் கடவுள், முசல் பனி, ஆடி பாவை போல, ஷம்பாலா என்று ஏழு நாவல்களை எழுதி இருக்கிறார்.

இந்த நாவல்களில் பல்வேறு வகைப்பட்ட கோட்பாடுகளை அவர் முன்வைத்திருக்கிறார். உதாரணமாக, சரித்திரத்தில் படிந்த நிழல்கள் என்ற நாவலில் வரலாற்றை அழித்து எழுதும் "பாலிம்செஸ்ட் ஹிஸ்டரி" என்ற உத்தியை தமிழ் எழுத்துப்போக்கில் அறிமுகம் செய்கிறார்.

இவரது நாவல்கள் பன்முக வாசிப்பு மிக்கவை. வாசிப்பின் அரசியலில் அவரது எழுத்தையும் தாண்டி, பன்முக பரிமாணம் கொண்டவை. மட்டுமல்ல ஜி.கே. எழுதிய மர்மநாவல் என்பது ஒரு மர்ம நாவலில் பிரதியில் எழுதப்பட்டதாகும். இது சகபிரதியில் என்ற உத்தியில் அமைந்ததாகும்.

ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்கள் என்ற நாவல் திருவிதாங்கூர் தமிழ்நாடு இணை பற்றிய அரசியலாகவும், வார்சாவில் கடவுள் நாவல் கீழை நாட்டுக்கும் மேலை நாட்டுக்கும் இடையிலான அரசியலாகவும், முசல்பனி நாவல் ஈழத்தமிழர் போராட்டம் பற்றிய அரசியலாகவும், ஆடிப்பாவை போல நாவல் இந்தி எதிர்ப்பு போராட்டம் பற்றிய அரசியலாகவும், ஷம்பாலா நாவல் இந்து மத அரசியல் குறித்த விவாதமாகவும் வாசிக்கலாம்.

இவ்வாறு, தமிழவனின் நாவல்களில் அரசியல் வெளிப்படும் தன்மையை நாம் அகநிலையிலும், புறநிலையிலும் கண்டு கொள்ளலாம்.

**ஷம்பாலா ஓர் அரசியல் நாவல்**

நாவலின் மையப் பாத்திரமான பேராசிரியர் அமர்நாத் ஓர் அறிவுஜீவி. சுதந்திரச் சிந்தனையாளர். அவர் வீட்டுக்குச் சிந்தனை போலீஸ் நுழைந்து அரவது கட்டுரைகளைக் கையகப்படுத்துகின்றனர். அவரைக் கைதுசெய்வதில்லை. ஆனால், மிக நுட்பமாக அவர்மீது உளவியல் தாக்குதல் நடத்துகின்றனர். அவர்கள் சென்ற பிறகு, வீட்டில் பத்திரமாக இருக்கும் அவருடைய மகள் கடத்தப்பட்டதாக போலீசுக்கு புகார் வந்திருப்பதாகவும், காவல்துறை தேடலுக்கு அமர்நாத் ஒத்துழைக்க வேண்டும் என்றும் குறுஞ்செய்திகளும் தொலைப்பேசித் தகவல்களும் தொடர்ந்து வந்தபடி இருக்கின்றன.

அமர்நாத் போன்ற அறிவுலகச் செயல்பாட்டாளர்களே ஏதோ சாதிக்கார அரசுகளுக்குப் பெரும் அச்சமளிப்பவர்களாகக் கருதப்படுகிறார்கள். அவர்களை உளவியல் ரீதியாக ஒதுக்குவதுதான் இன்றைய புதிய அடக்குமுறை உத்தி. புத்தகங்களை அழிப்பது பழைய முறை புத்தகங்களை உருவாக்கும் மனங்களை ஆட்சியாளர்கள் அழிப்பதுதான் புதிய முறை என்பதை நாவல் வெளிப்படுத்துகிறது.

ஒரு தலித் மாணவன் தன்னைத் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவன் என்று அழைக்கும்போது அவமானமாக உணர்வதாகவும், நாங்கள் இந்து சமூகத்தை சேர்ந்தவர்கள் என்ற முழக்கத்தில் சேர்த்துக்கொள்ளும் போது அவனுக்கு ஆன்ம திருப்தி கிடைப்பதாகவும் கூறுகின்றான்.

கோடீஸ்வரத் தொழிலதிபர்கள் வங்கிகளிடமிருந்து பெருந்தொகைகளைக் கடனாகப் பெற்று தலைமறைவாவது. சபரிமலையில் பெண்கள் நுழைவு, பணமதிப்பிழப்பு, மத அரசியல் செய்பவர்கள், என்கவுன்டர்களுக்காக ஆட்சியாளர்களிடமிருந்து காவல் துறைக்கு வரும் மறைமுக அழுத்தங்கள், ராமர் கோயில் கட்டிய பின்பு அடுத்த 150 வருடங்களுக்கான பொருளாதார மூலதனம்

கிடைக்கும் என்ற சமகாலப் பிரச்சனைகள் குறித்தும் நாவலில் பேசப்பட்டிருக்கிறது.

''ஷம்பாலா'' என்ற இடம் திபெத்தில் உள்ளதாகவும், உலகிலேயே அதிகமான அதிகாரம் உறைந்திருக்கும் இடம் என்றும், அந்த இடம் உலகத்தை அழிக்கவும் ஆக்கவும் வல்லது என்றும் தொன்மக் கதைகள் கூறுகின்றன.

அந்த இடத்தை அடைந்து பெரும் சக்தியைப் பெற்று பெரும் அதிகாரத்தைப் பெறுவதற்கு மிகச் சாதாரண நிலையிலிருந்து அமைச்சராக உயர்ந்த ''ஹிட்லர்'' என்ற பெயர் கொண்ட ஒரு பாத்திரம் தயாராவது இந்நாவலுக்குள்ளே பொதிந்திருக்கும் ஓர் உபகதையாகும். ஹிட்லர் என்கிற வரலாற்று மனிதனின் மீட்டுருவாக்கம் செய்யப்படுவதும் ஓர் உத்தியாகும். மையக் கதைக்கு இணையாகச் செல்லும் அது அமர்நாத் எழுதும் கதை என்று நாவலில் சொல்லப்படுகிறது. அதிகாரப்பிரயோகம் ஒவ்வொரு தளத்திலும் இயங்கும் விதங்களைப் பதிவுசெய்வதாக இருந்தாலும் நாவலின் தீவிரத்தன்மையை இப்பகுதி சற்று தளர்வடையச் செய்கிறது.

**ஷம்பாலா நாவலில் வெளிப்படும் அரசியல்**

ஷம்பாலா நாவலின் மையக்கதாபாத்திரமான அமர்நாத், தன் பிழைப்பு எழுத்து, மனிதாபிமானம், சிந்தனை போன்ற எல்லாம் அரசால் உளவுபார்க்கப்படுவதை அறிகிறார். நாட்டில் அதுவரை குடிமக்கள் அறியாத சம்பவங்கள் நிகழ்கின்றன. மக்கள் பெரிதாய் அலட்டிக் கொள்வதில்லை. மத்தியதர வர்க்கம் மதத்தை அளவுகோலாக வைத்து அனுபவங்களை இரண்டாய் பாகுபடுத்துகிறது.

காவலர்கள் தொடர்ந்து நாட்டில் பரவும் அறிவைக் கட்டுப்படுத்தவும் உளவு பார்க்கின்றனர். அறிவாளி வர்க்கம் கருத்துலக நெருக்கடியை உணர்கிறது. அமர்நாத்தின் நண்பரான கல்லூரி ஆசிரியர் சுரேஷ் அரசு பரப்பும் ஒற்றாய்

பார்க்கப்பட போட்டி நடக்கிறது. தொலைக்காட்சியில் நுட்பமாய் அரசுக்குச் சார்பான பிரச்சாரமும் உணர்வைத் தூண்டும் காரியங்களும் நிகழ்கின்றன.

இரண்டு தளங்களில் நடக்கும் கதையின் இன்னொரு தளத்தில் உலகை நடுநடுங்க வைத்த வரலாற்றைப் பாத்திரத்தின் பெயருடன் ஒரு சிறுவன் தோன்றுகின்றான். அச்சிறுவன் பெயர் ஹிட்லர்.

திபெத்திலுள்ள ஷம்பாலாவுக்குப் பயணம் போன ஒரு நவீன சாமியார் அமைச்சனாகியுள்ள இந்த இரண்டாம் ஹிட்லரைச் சந்திக்கிறார். உலக அதிகாரமெல்லாம் மையம் கொண்டிருப்பது ஷம்பாலா என்கிறார். மொத்த நாவலும் அரசியல் குறியீடு போல செயல்படுகிறது.

ஷம்பாலா நாவல் இந்து மத அரசியல் குறித்த விவாதமாகவும் வாசிக்கலாம். இன்றைய சூழல் எந்த அளவுக்கு சுதந்திரச் சிந்தனைக்கும், அறிவுச் செயற்பாடுகளுக்கும் எதிராக இருக்கிறது என்பதை எந்தத் தரப்பின் சார்பாகவும் நிற்காமல் சுயமான குரலில் பேசுகிறது ''ஷம்பாலா''

**முடிவுரை**

பிரச்சாரங்கள் கட்டுரைகள் மூலம் முன்வைக்கப்படும் விமர்சனங்களைவிட ஓர் இலக்கியப் படைப்பின் குரல் கூர்மையானது என்பதை தமிழவனின் ''ஷம்பாலா'' நிரூபிக்கிறது. தமிழவன் தொடர்ந்து தனது எல்லா இலக்கியப்பிரதிகளிலும் அரசியல் உள்ளடக்கத்தை வெளிப்படுத்தி இருப்பது தனியாக ஆய்வுக்குட்படுத்த வேண்டிய ஒன்றாகும்.

**நூல் குறிப்பு**


1. *ஷம்பாலா ஓர் அரசியல் நாவல் - தமிழவன் 2019*
2. *ஜி.கே. எழுதிய மர்ம நாவல் - தமிழவன் 2011*
3. *ஆடிப்பாவைபோல - தமிழவன் 2017*
4. *வார்ஷாவில் ஒரு கடவுள் - தமிழவன்*
5. *முசல்பனி - தமிழவன் 2012*
6. *சாரித்திரத்தில் படிந்த நிழல்கள் - தமிழவன் 2010*